# நடைபாதையில் அங்காடிக் கடைகள்

## மூசாங் கிங் டுரியான் வியாபாரி மீதும் நடவடிக்கை




கோலாலம்பூர், ஆக.12-

தலைநகர் கோலாலம்பூரில் நடைபாதைக்கு இடையூறை ஏற்படுத்தி லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்தவர்களின் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

7 அங்காடிக் கடைகள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூசாங் கிங் டுரியான் விற்பனை செய்த கடையும் அதில் அடங்கும். சம்பந்தப்பட்ட இந்த வியாபாரிகள் சாலையோரம் அங்காடிக் கடையை அமைத்திருந்தனர் என்று தெரியவருகிறது. பொதுமக்களுக்கான நடைபாதையில் இவர்கள் மேஜை நாற்காலிகளையும் வைத்திருந்தது தெரிய வருகிறது.

சிகாம்புட், கெப்போங்கில் உள்ள கோலாலம்பூரில் மாநகர் மன்றத்தின் அமலாக்கப்பிரிவு அதிகாரிகளுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மாநகர் மன்றத்தின் அறிக்கை கூறியது.

சிகாம்புட் நாடாளுமன்றத் தொகுதியில் இரண்டு அங்காடிக் கடைகள் மீதும் கெப்போங் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள 5 அங்காடிக் கடைகள் மீதும் 1974ஆம் ஆண்டு சாலை, வடிகால், கட்டட சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் ஜாலான் லொம்போங், தாமான் மிஹார்ஜா செராஸில் உள்ள மாநகர் மன்ற கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன. அனைத்துத் தரப்பினரும் சட்டவிதிகளை கடைப்பிடிக்க வேண்டும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் வேண்டுகோள் விடுத்தது. அடையாளம் காணப்படும் பகுதிகளில் தொடர்ந்து கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படும்.